வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 07.08.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 213 பக்கங்கள் : 08




# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்!

## அரசமைப்பு உருவாக்கத்தையும் துரிதமாக்கவேண்டும் ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தியது இந்தியா

கொழும்பு, ஓகஸ்ட். 07

**நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்றும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அரசியலமைப்பு ஏற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் இந்தியா இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.**

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியின் இலங்கை உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட இலங்கைத் தலைவர்களுடனான சந்திப்புகளின் போது, மாகாண

07

## நல்லூரான் வடக்கு வாசல் வளைவு நேற்று காண்பிய விரிப்பு கண்டது



யாழ்ப்பாணம், ஓக. 07

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு திசையில் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசலான "நல்லூரான் வடக்கு வாசல் வளைவு" நேற்று வியாழக்கிழமை

07

## தையிட்டி பவானி வீதி திறப்பு விவகாரம் பொலிஸ் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஆக. 07

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள பவானி வீதி தொடர்பாக பலாலி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்ததுடன்,

07

## கனடாவில் வேலைவாய்ப்பு என மோசடி

## எத்தியோப்பியாவில் 3 இலங்கையர் கடத்தல் பிரதான சூத்திரதாரி கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஓக. 07

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மூன்று இளைஞர்களை எத்தியோப்பியாவுக்கு அனுப்பி, அங்கு பாதாள உலகக் குழுவினரிடம் சிக்க வைத்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கடத்தல் மற்றும் கடற்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்த சம்பவம் தொடர்பான

07

## சிந்துபாத்தி மயான சுற்றுமதிலுக்கு வெளியேயும் அகழ்வு நடத்த திட்டம்!

யாழ்ப்பாணம், ஆக. 07

செம்மணியில் தற்போது அகழாய்வு மேற்கொள்ளப்படும் பகுதிக்கு அப்பாலும் மனித புதைகுழிகள் இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், சிந்துபாத்தி மயானத்தை அண்மித்த இரண்டு இடங்களில் ஆரம்பகட்ட ஆய்வு அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தொல்பொருளியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் மேற்பார்வையில் குறித்த இரண்டு இடங்களில் எழுமாற்று

07

## கேப்பாபிலவு மக்களின் காணி மீட்பு போராட்டம் 45ஆவது நாளை எட்டியது

முல்லைத்தீவு, ஓக. 07

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவு பகுதியில், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப்படும் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி அப்பகுதி மக்கள் முன்னெடுத்து வரும் இரண்டாம் கட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 45ஆவது நாளை எட்டியுள்ளது.

07

## 2.5 மில்லியன் டொலர்கள் இணைய மோசடி: 5 நாடுகளிடம் சட்ட உதவி கோரிய இலங்கை

கொழும்பு, ஓக. 07

கடன் சேவைக்கான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி சைபர் திருட்டுக்குள்ளான சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக சாம்பியா உள்ளிட்ட ஐந்து நாடுகளிடம் இலங்கை பரஸ்பர சட்ட உதவியை கோரியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சாம்பியாவுடன் இணைந்து அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிடமும் சட்ட உதவி கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். அவுஸ்திரேலியாவுக்கு கடன் சேவையின் ஒரு பகுதியாக அனுப்பப்படவிருந்த 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் சைபர் மோசடிக்கு இலக்கான விவகாரம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

07

## 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பை தடுத்து கூட்டாட்சித் தீர்வை உருவாக்க வேண்டும்!

## இந்தியாவிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து, ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையை நீக்கி, தமிழ்த்தேசத்தின் தனித்துவமான இறையாண்மையை அங்கீகரிக்கும் கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர்

07

## கொண்டாட்டத்துக்கு தயாரான குடும்பத்துக்கு பெரும் அதிர்ச்சி!

### உரும்பிராயில் 28 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 07

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் தெற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த மர்ம நபர்கள், தாலிக்கொடி உள்ளிட்ட சுமார் 28 பவுன் பெறுமதியான தங்க நகைகளை திருடிச் சென்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் படி, வீட்டார் மறுநாள் நடைபெறவிருந்த குடும்பக் கொண்டாட்ட நிகழ்வுக்காக இரவு நேரத்தில்

07

## செம்மணியில் நேற்று 8 மனித என்புக்கூடுகள் அடையாளம்!


யாழ்ப்பாணம், ஆக. 07

இலங்கையின் மிகப் பெரிய மனித புதைகுழியாகக் கருதப்படும் செம்மணி-சித்துபாத்தி மனித புதைகுழி அகழாய்வில் நேற்று மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், 8 மனித

07

## கடல் கொந்தளிப்பால் நெடுந்தீவில் கரையொதுங்கிய மீனவர்கள் படகு!

### 11 பேர் இலங்கை கடற்படையால் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 07

கடல் கொந்தளிப்பு காரணமாக தமிழக மீனவர்களின் படகொன்று யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில்,

07

## லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஓக. 07

ஓகஸ்ட் மாதத்துக்கான லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, தற்போது

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுரேஷ் சாலே வழக்கு தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு!

## விமல் உள்ளிட்டோருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக. 07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலே தொடர்பான விசாரணைகளை பாதிக்கும் வகையில் ஊடகங்களில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஆறு அரசியல் பிரமுகர்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன நேற்று திறந்த நீதிமன்றத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

குறித்த நபர்கள் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, சுகீஷ்வர பண்டார, அசங்க நவரத்ன மற்றும் மகிந்த பதிரண ஆகியோர் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இவ்வாறான கருத்துகள் தண்டனைக்குரிய குற்றமாக அமையக் கூடும் எனவும், சம்பந்தப்பட்ட ஊடக நிகழ்ச்சிகளின் முழுமையான காணொளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, நீதிமன்ற செயற்பாடுகளின் சுயாதீனத்தையும் விசாரணைகளின் நம்பகத்தன்மையையும் பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜூலையில் தேசிய தேயிலை ஏல சராசரி விலை உயர்வு!

கொழும்பு, ஒக. 07

இலங்கையின் தேசிய தேயிலை ஏலத்தின் சராசரி விலை ஜூலை மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை மாத தேசிய தேயிலை ஏலத்தின் சராசரி விலை ஒரு கிலோகிராமுக்கு 1,176.10 ரூபாயாக பதிவாகியுள்ளது. இது ஜூன் மாத சராசரி விலையான 1,153.49 ரூபாயுடன் ஒப்பிடுகையில் 22.61 ரூபாய் அதிகரிப்பாகும்.

இந்த உயர்வுக்கு முக்கிய காரணமாக குறைந்த உயரப்பகுதி தேயிலையின் விலை அதிகரித்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகை தேயிலையின் சராசரி விலை ஒரு கிலோகிராமுக்கு 1,293.06 ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும், உயரப்பகுதி தேயிலையின் விலையும் அதிகரித்துள்ள நிலையில், நடுத்தர உயரப்பகுதி தேயிலையின் விலையில் சிறியளவு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

எனினும், கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு நாணய மதிப்பில் தேயிலை விலை உயர்ந்திருந்தாலும், அமெரிக்க டொலர் அடிப்படையில் அனைத்து வகை தேயிலைகளின் பெறுமதியும் 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. (அ)

# அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் ம.வி. காணியைப் பாதுகாப்பதற்கு போராட்டம்

கொழும்பு, ஒக. 07

அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு தமிழ் பாடசாலையான விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் காணியைப் பாதுகாக்கக் கோரி பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

1944ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் காணிகள் காலப்போக்கில் பல்வேறு அரச நிறுவனங்களின் தேவைகளுக்காக கையகப்படுத்தப்பட்டு வந்துள்ளதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பாடசாலை அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள பகுதி உட்பட சுமார் ஒரு ஏக்கர் காணியை, அநுராதபுரம் வலயக் கல்வி அலுவலகத்தின் கட்டடம் அமைப்பதற்காகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது அதிபருக்கு முன் அறிவித்தல் எதுவும் வழங்கப்படாமல், பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்து குறித்த காணியில் திடீரென சிரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து வட மத்திய மாகாண ஆளுநரைச் சந்தித்து மனுவொன்றை கையளித்துள்ளனர்.

ஏற்கனவே பாடசாலையின் பெருமளவான காணிகள் வேறு அரச நிறுவனங்களுக்காகப் பெறப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள காணியையும் வேறு தேவைகளுக்காக கையகப்படுத்தக் கூடாது என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மாணவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சி மற்றும் பாடசாலை கட்டமைப்பு விரிவாக்கத்திற்காக குறித்த காணியைப் பாதுகாக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# 2 ஆண்டுகளுக்குள் டெங்குவை ஒழிக்க தேசிய வேலைத்திட்டம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஒக. 07

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டில் டெங்கு நோயை முழுமையாகக் கட்டுப்படுத்தி ஒழிப்பதை இலக்காகக் கொண்டு திட்டமிட்ட தேசிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதிக டெங்கு அபாயம் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்வதற்கும், நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முந்தைய டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளை அடையாளம் காணுதல், அபாயப் பகுதிகளை இனங்காணுதல், ஒருங்கிணைந்த நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல், தொழில்நுட்ப உதவிகளை விரிவுபடுத்துதல், சிகிச்சை சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் டெங்கு மரணங்களை குறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

சமீப காலங்களில் டெங்கு மரணங்கள் குறைந்திருப்பது முக்கியமான முன்னேற்றம் எனக் குறிப்பிட்ட அமைச்சர், நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் காலங்களிலும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

மேலும், சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டம் வரை செயற்படும் வகையிலான கட்டமைக்கப்பட்ட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவிக்கையில், அண்மைய நடவடிக்கைகளின் பயனாக தினசரி பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,300 இலிருந்து 350-400 ஆகக் குறைந்துள்ளதாக குறிப்பிட்டார். (அ)

# தனியார் பஸ் சேவையை மறந்துவிட்டு புதிய முறை குறித்து பேசுவது வேடிக்கை!

## கெமுனு விஜயரத்ன சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக. 07

இலங்கையின் போக்குவரத்துத் துறையில் தனியார் பஸ் சேவை கடந்த 25 முதல் 50 ஆண்டுகளாக முக்கிய பங்காற்றி வருவதாகவும், மக்கள் நீண்ட காலமாக இந்த சேவையையே நம்பி பயணித்து வருவதை மறந்துவிட்டு சிலர் புதிய சிந்தனைகள் குறித்து பேசுவது வேடிக்கையானது என்றும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கையில் 1978ஆம் ஆண்டு முதல் தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் பல தசாப்தங்களாக பொதுமக்களின் போக்குவரத்து தேவையை இந்த சேவை பூர்த்தி செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அக்காலப் பகுதியில் ஏற்பட்ட போக்குவரத்து பற்றாக்குறையை சமாளிப்பதில் தனியார் பஸ்கள் முக்கிய பங்காற்றியதாகவும் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

தற்போது "மெட்ரோ பஸ்" திட்டம் தொடர்பில் பேசப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், நடைமுறையில் அது வழக்கமான பஸ் போக்குவரத்து முறையின் ஒரு வடிவமே எனக் கூறினார். மெட்ரோ பஸ் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்குவதற்கே குறைந்தது ஆறு மாதங்கள் தேவைப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, நடைமுறைக்கு வராத திட்டங்களை முன்வைத்து மக்களை தவறாக வழிநடத்தும் நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டும் என்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன வலியுறுத்தினார். (அ)

# பல்கலைக்கழகப் பதிவு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஒக. 07

2025ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பதிவுகள் நேற்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நடைபெறும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் குறித்த காலப்பகுதிக்குள் தங்களது பதிவுகளை நிறைவு செய்யுமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒதுக்கப்பட்டுள்ள பாடநெறி அல்லது பல்கலைக்கழகம் தொடர்பாக ஏதேனும் மேன்முறையீடுகளை முன்வைக்க விரும்பும் மாணவர்கள், அவற்றை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu 07.08.2026 வெள்ளிக்கிழமை

பராபவ வருடம், ஆடி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வழக்கமான இராஜதந்திர நாடகங்கள்?

இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரியின் ஒரு நாள் கொழும்பு விஜயமும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கும் அறிவிப்புக்களும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த உதவும் என்பது போன்ற தோற்றத்தை வெளிப்புறத்தில் ஏற்படுத்தக்கூடும்.

ஆனால், இரு நாடுகளுக்கும் இடையிலான கடந்தகால அனுபவங்களை நடுநிலையோடு நோக்கும் எவருக்கும் ஒரு முக்கியமான கேள்வி எழாமல் இருக்கமுடியாது. மிஸ்றியின் விஜயத்தின்போது நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளும் கைச்சாத்தான உடன்பாடுகளும் மெய்யாகவே தீர்க்கமான முன்னேற்றத்தை தருமா அல்லது வழக்கம் போல கடதாசிகளில் கைச்சாத்திடும் மற்றொரு இராஜதந்திரச் சடங்காகவே முடிந்துவிடுமா?

மிஸ்ரியின் விஜயத்தின்போது கடன் உதவிகள், துறைமுக நவீனமயமாக்கல், மின்சாரக் கூட்டிணைப்பு, மலையக வீடமைப்பு திட்டங்கள் என்று கோடிக் கணக்கான டொலர்கள் மதிப்பிலான திட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த சில தசாப்தங்களாக இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பபட்ட ஒப்பந்தங்களின் பட்டியலையும் அவற்றின் தற்போதைய நிலைமையையும் உற்றுநோக்கினால் ஒரு தெளிவான உண்மை புலப்படும்.

ஆட்சியாளர்கள் மாறினாலும், வெளியுறவு செயலாளர்களும் தூதுவர்களும் மாறிமாறி வந்து போனாலும், பேசப்படும் விடயங்களும் வழங்கப்படும் வாக்குறுதிகளும் பெரியளவில் மாறுவதேயில்லை. "இந்திய - இலங்கை உறவில் புதிய அத்தியாயம்" என்ற என்ற வரி ஒவ்வொரு விஜயத்தின்போதும் திரும்பத்திரும்ப உச்சரிக்கப்படும் ஒரு வழக்கமான சொற்றொடராகவே மாறிவிட்டன.

குறிப்பாக, திருகோணமலை சக்தி மையம், மின்சாரக் கூட்டிணைப்புத் திட்டங்கள்பல தசாப்தங்களாக பேசப்பட்டு வருகின்றனவே தவிர, எந்தவொரு அடைவையும் எட்டுவதில்லை. ஒரு அரசாங்கம் கையெழுத்திடும் ஒப்பந்தத்தை அடுத்த அரசாங்கம் அரசியல் காரணக்களுக்காக கிடப்பில் போடுவதும் அல்லது புவிசார் அரசியல் தந்திரோபாயங்களுக்கு பலியாக்குவதும் தொடர்கதையாகி விட்டது.

இந்த நிலையில் இருந்து மாற்றம் ஏற்பட்டு, பேச்சுவார்த்தைகள் உண்மையான முன்னேற்றத்தைக் காண்பதானால் இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறைகளிலும் கொள்கைப் போக்கிலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவது மிகவும் அவசியமாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் உன்னதமான நிலையில் இருப்பதாக தோன்றினாலும், இந்திய உதவியுடனான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் காட்டும் போக்கு முன்னைரப் போன்றே தொடருகிறது.

ஆட்சி மாற்றங்கள் நிகழும்போது முன்னைய அரசாங்கங்களின் ஒப்பந்தங்களை இடைநிறுத்துவது அல்லது மறுபரிசீலனை செய்வது என்ற பெயரில் தாமதப்படுத்தும் போக்கு கைவிடப்பட வேண்டும். இந்தியாவின் முதலீடுகளையும் திட்டங்களையும் உள்நாட்டு அரசியலுக்கு பலிக்கடாவாக்காமல் தொடர்ச்சியான நிலைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

எனவே விக்ரம் மிஸ்ரியின் இந்த விஜயத்தின்போது அறிவிக்கப்பட்டிருக்கும் கடனுதவிகளும் திட்டங்களும் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துவிடும் என்று நம்புவது அவசர முடிவாகவே இருக்கும். ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களின் வழமையான அணுகுமுறையை மாற்றி வாக்குறுதிகளை (மாகாணசபை தேர்தல்கள், 13 வது திருத்தம் உட்பட) நடைமுறையில் நிறைவேற்றும் வரை இத்தகைய பேச்சுவார்த்தைகளை வழக்கம் போல அரங்கேறும் இன்னொரு இராஜதந்திர நாடகமாகவே பார்க்க வேண்டியிருக்கிறது

# இலங்கைச் சிறுவர்களும் ஸ்மார்ட்போன்களும்



இன்றைய டிஜிட்டல் யுகத்தில், ஸ்மார்ட்போன்கள் அன்றாட வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கமாக மாறியுள்ளன. அவை தொடர்பு கொள்ளவும், கல்விக்கும், பொழுது போக்கிற்கும், தகவல்களைப் பெறவும் பயன்படுகின்றன. இலங்கையில், கடந்த தசாப்தத்தில் ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்தும் சிறுவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

ஸ்மார்ட்போன்கள் பல கல்வி மற்றும் சமூக நன்மைகளை வழங்கினாலும், அவற்றின் அளவுக்கு அதிகமான அல்லது தவறான பயன்பாடு சிறுவர்களின் உடலாரோக்கியம், மனநலம், கல்விச் செயல்பாடு மற்றும் சமூக வளர்ச்சியில் கடுமையான சவால்களை உருவாக்கக்கூடும். எனவே, பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகமும் சிறுவர்களைப் பொறுப்பான முறையில் ஸ்மார்ட்போன்களைப் பயனபடுத்த வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.

ஸ்மார்ட்போன்களின் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்று, அவை கற்றலுக்குத் துணைபுரியும் திறன் கொண்டவை என்பதாகும். மாணவர்கள் சில தட்டல்களிலேயே (taps) ஆன்லைன் பாடங்கள், கல்வி வீடியோக்கள், டிஜிட்டல் நூலகங்கள், அகராதிகள் மற்றும் கற்றல் செயலிகளை அணுக முடியும். கோவிட்-19 தொற்றுநோய்க் காலத்தில், இலங்கையில் இணையவழிக் கல்விக்கான அத்தியாவசியக் கருவிகளாக ஸ்மார்ட்போன்கள் மாறின.

பல குழந்தைகள் இணையவழி வகுப்புகளில் பங்கேற்றனர், வீட்டுப்பாடங்களைச் செய்தனர் மற்றும் மொபைல் சாதனங்கள் மூலம் தங்கள் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டனர். இன்றும் கூட, ஸ்மார்ட்போன்கள் மாணவர்கள் வகுப்பறைக்கு அப்பால் உள்ள பாடங்களை ஆராயவும், அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உதவுகின்றன.

ஸ்மார்ட்போன்கள் தொடர்பாடலையும் மேம்படுத்துகின்றன. குழந்தைகள் குறிப்பாக அவசர காலங்களில் தங்கள் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்பில் இருக்க முடியும். பெற்றோர்கள் எந்நேரமும் தங்கள் குழந்தைகளைத் தொடர்பு கொள்ள முடியும் என்பதை அறிந்து பாதுகாப்பாக உணர்கிறார்கள்.

செய்தியிடல் தளங்களில் (messaging platforms) உள்ள கல்விக் குழுக்கள், மாணவர்கள் குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், வீட்டுப்பாடங்களைப் பற்றி விவாதிக்கவும், முக்கியமான பள்ளி அறிவிப்புகளைப் பெறவும் அனுமதிக்கின்றன. இந்தத் தொடர்பாடல் கருவிகள் கற்றலையும் ஒத்துழைப்பையும் முன்பை விட எளிதாக்கியுள்ளன.

இந்த நன்மைகள் இருந்தபோதிலும், ஸ்மார்ட்போன் அடிமைத்தனம் இலங்கையில் வளர்ந்து வரும் கவலையாக மாறியுள்ளது. பல குழந்தைகள் படிப்பதற்கோ அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதற்கோ பதிலாக, இணையவழி விளையாட்டுக்களில் ஈடுபடுவதிலும் வீடியோக்களைப் பார்ப்பதிலும், சமூக ஊடகங்களை உலாவுவதிலும் நீண்ட நேரத்தைச் செலவிடுகிறார்கள்.

அதிகப்படியான திரை நேரம் (screen time) கவனத்தைக் குறைக்கலாம், கல்விச் செயல்பாட்டைக் குறைக்கலாம் மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன்களைக் பலவீனப்படுத்தலாம். ஸ்மார்ட்போன்களைச் சார்ந்திருக்கும் குழந்தைகள் தங்கள் நேரத்தைச் திறம்பட நிர்வகிப்பதில் சிரமப்படலாம். புத்தகங்களைப் படித்தல், வெளிப்புற விளையாட்டுகள் மற்றும் ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்குகளில் ஆர்வத்தை இழக்கக்கூடும்.

மற்றொரு முக்கிய பிரச்சினை சிறுவர்களின் உடலாரோக்கியத்தில் ஸ்மார்ட்போன்கள் ஏற்படுத்தும் தாக்கமாகும். சிறிய திரையை பல மணி நேரம் பார்ப்பது கண் சோர்வு, தலைவலி, தவறான உடல் அமைப்பு (poor posture) மற்றும் கழுத்து வலியை ஏற்படுத்தும். உடற்பயிற்சி இன்மை உடல் பருமன் மற்றும் பிற சுகாதாரப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

மேலும், இரவில் தாமதமாக ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்துவது தூக்கத்தைப் பாதிக்கலாம், ஏனெனில் திரைகளில் இருந்து உமிழப்படும் நீல ஒளி உடலின் இயல்பான தூக்கச் சுழற்சியைப் பாதிக்கிறது. போதுமான தூக்கம் பெறாத குழந்தைகள் பெரும்பாலும் சோர்வு, குறைந்த கவனம் மற்றும் பள்ளியில் குறைவான திறனை அனுபவிக்கிறார்கள்.

ஸ்மார்ட்போன்கள் சிறுவர்களின் மன மற்றும் உணர்ச்சி நல்வாழ்வையும் பாதிக்கலாம். சமூக ஊடகத் தளங்கள் சில நேரங்களில் குழந்தைகளுக்கு யதார்த்தமற்ற வாழ்க்கை முறைகளையும் ஆரோக்கியமற்ற ஒப்பீடுகளையும் வெளிப்படுத்துகின்றன. இதன் விளைவாக, சில குழந்தைகள் மன அழுத்தம், பதற்றம் அல்லது குறைந்த சுயமரியாதையை அனுபவிக்கலாம்.

இணையவழிக் கேலி/ துஷ்பிரயோகம் (Cyberbullying) என்பது மற்றொரு தீவிரமான பிரச்சினையாகும். புண்படுத்தும் செய்திகள், இணையவழி துன்புறுத்தல் மற்றும் எதிர்மறையான கருத்துக்கள் ஒரு குழந்தையின் தன்னம்பிக்கையையும் உணர்ச்சி ஆரோக்கியத்தையும் ஆழமாகப் பாதிக்கும். இது போன்ற சூழ்நிலைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்று பல குழந்தைகளுக்குத் தெரியாததால், இணையவெளியில் பாதுகாப்பாக இருக்க அவர்களுக்குப் பெரியவர்களின் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது.

மற்றொரு கவலை என்னவென்றால், குழந்தைகள் பொருத்தமற்ற உள்ளடக்கத்திற்கு ஆளாவதாகும். முறையான மேற்பார்வை இல்லாவிட்டால், குழந்தைகள் எதேச்சையாக இணையத்தில் வன்முறை, தீங்கு விளைவிக்கும் அல்லது தவறான தகவல்களை அணுகக் கூடும். அவர்கள் இணையவெளி மோசடிகளுக்கோ அல்லது தீய எண்ணம் கொண்ட அந்நியர்களுக்கோ பலியாகலாம். எனவே குழந்தைகளுக்கு இணையவெளி பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் பொறுப்பான இணைய பயன்பாடு பற்றி கற்பிப்பது அத்தியாவசியமாகும்.

சிறுவர்களின் உணர்ச்சி வளர்ச்சிக்கு வலுவான குடும்பப் பிணைப்புகள் முக்கியமானவை, எனவே குடும்பங்கள் உணவருந்தும் நேரம், படிக்கும் நேரம் மற்றும் குடும்பக் கூட்டங்களின் போது சாதனங்கள் இல்லாத நேரத்தை (device-free time) ஊக்குவிக்க வேண்டும். ஒன்றாகத் தரமான நேரத்தைச் செலவிடுவது நம்பிக்கையை வளர்க்கவும் உறவுகளை வலுப்படுத்தவும் உதவுகிறது.

பொறுப்பான ஸ்மார்ட்போன் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் பள்ளிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு. இணையவெளி நெறிமுறைகள் மற்றும் இணைய பாதுகாப்பு பற்றி கற்பிக்க முடியும். ஸ்மார்ட்போன்களை முற்றிலுமாகத் தடை செய்வதற்குப் பதிலாக, கல்வி நோக்கங்களுக்காக தொழில்நுட்பத்தை எவ்வாறு புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவது என்பதைப் பள்ளிகள் மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்.


நேர முகாமைத்துவம், விமர்சனச் சிந்தனை மற்றும் பொறுப்பான சமூக ஊடக பயன்பாடு பற்றிய பாடங்கள் குழந்தைகள் ஆரோக்கியமான டிஜிட்டல் பழக்க வழக்கங்களை வளர்த்துக்கொள்ள உதவும்.

*(மிகுதி நாளை)*

(சௌமியா அசோசியஸ், த ஐலண்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**ஆகஸ்ட் - 07 வெள்ளிக்கிழமை**
பராபவ வருடம் - ஆடி 22
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பொறுமை தேவைப்படும்.

**மிதுனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**கடகம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் வீண் அலைச்சலும் இருக்கும். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயார் ஆதரவாக பேசுவார். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# யாழ்ப்பாணம், வவுனியா சிறைச்சாலைகளின் பாதுகாப்பு குறித்து விசேட கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக. 07

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறைச்சாலைகளின் தற்போதைய நிலை, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று முன் தினம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவித்த அமைச்சர் இ. சந்திரசேகர், தென்னிலங்கை சிறைச்சாலைகளுடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறைச்சாலைகள் மிகவும் சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் இயங்கி வருவதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறினார். சிறியளவில் நெரிசல் காணப்பட்டாலும், அதனை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கைதிகளுக்குத் தொழிற்கல்வி, கல்வித் தொடர்ச்சி, நூலக வசதி மற்றும் கணினிப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், இந்த சிறைச்சாலைகள் ஆக்கபூர்வமான சூழலை உருவாக்கியுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்பாராத அவசர நிலைமைகளை சமாளிப்பதற்கும் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் விசேட பாதுகாப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இக்கலந்துரையாடலில் பாதுகாப்புத் துறை, பொலிஸ், சிறைச்சாலை மற்றும் மாவட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# தேசிய காணி உரிமைத் திட்டம் தொடர்பில் கிளிநொச்சி உத்தியோகத்தர்களுக்கு விளக்கம்

கிளிநொச்சி, ஒக.07

பாரம்பரிய காணி உறுதி முறைக்கு மாற்றாக, உறுதியான காணி உரிமைச் சான்றிதழ்களை வழங்கும் தேசிய வேலைத்திட்டமான 'பிம்சவி' தொடர்பான தெளிவூட்டல் கலந்துரையாடல் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.


கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், மாவட்டத்தின் குடியேற்ற மற்றும் காணி உத்தியோகத்தர்களுக்கு 'பிம்சவி' திட்டத்தின் நடைமுறைகள், செயல்படுத்தும் விதம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, உதவிப் பதிவாளர் நாயகம் கருணாரட்ண, காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் ஆணையாளர் விசாரணை சுனேத்திரா கோரள ஆராய்ச்சி, உதவி ஆணையாளர்கள் ஜெயரட்ண மற்றும் குணவர்த்தன, மேலதிக உரித்துப் பதிவாளர் தேனுஜா பியரத்தின, உரித்துப் பதிவாளர் ஹெட்டியாராய்ச்சி, மேலதிக மாவட்ட பதிவாளர் ரத்னசூரியா மற்றும் பிரதிப் பதிவாளர் நாயகம் ஆனந்தி ஜெயரட்ணம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், கரைச்சி பிரதேச செயலாளர் த. முகுந்தன், மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு திணைக்கள அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# ஓமந்தை பிரதேச வைத்தியசாலைக்கு சத்தியலிங்கம் எம்.பி. நேரில் விஜயம்!

**தேவைப்பாடுகள் குறித்து ஆராய்வு**



வவுனியா, ஒக. 07

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மருத்துவருமான ப. சத்தியலிங்கம், வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் செய்து, அங்குள்ள அவசரத் தேவைகள் மற்றும் நிலவும் பிரச்னைகள் தொடர்பாக நேரில் ஆராய்ந்தார்.

இதன்போது, வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி, ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரை சந்தித்த அவர், வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு, சேவைத் தேவைகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார்.

வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உரிய அரச தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்று, அவற்றுக்கு விரைவில் தீர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

இந்த விஜயத்தில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சிவபாலன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ)

# மின் தடை நேரத்தில் துணிகரக் கொள்ளை!

**அராலி வடக்கில் 10 பவுண் நகை அபகரிப்பு**

யாழ்ப்பாணம், ஒக. 07

அராலி வடக்கு பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் வீடொன்றில் புகுந்த மர்மக் கும்பல், தாக்குதல் நடத்தி சுமார் 10 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, நால்வர் கொண்ட கும்பல் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்தவர்களை தாக்கிய பின்னர் வீட்டில் இருந்த சுமார் 10 பவுண் தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்றுள்ளது.

சந்தேகநபர்கள் முகங்களை மூடிய நிலையில் வந்திருந்ததால் அவர்களை அடையாளம் காண முடியவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளையில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊழல் எதிர்ப்பு சட்டப் பிணை விதிகள் அடிப்படை உரிமைகளுக்கு அச்சுறுத்தல்

## சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 07

ஊழல் எதிர்ப்பு (திருத்த) சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ள பிணை தொடர்பான ஏற்பாடுகள் அடிப்படை உரிமைகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதுடன், ஏற்கனவே நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சிறைச்சாலை நெரிசலை மேலும் மோசமாக்கும் என சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2023 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 149ஆவது பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் குறித்து அமைப்பு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின் கீழ், ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழான அனைத்து குற்றங்களும் கைது செய்யக்கூடியதும் பிணை வழங்க முடியாததுமான குற்றங்களாக மாற்றப்படவுள்ளதாகவும், 100,000 ரூபாவுக்கும் அதிகமான இலஞ்சம் அல்லது 500,000 ரூபாவுக்கும் அதிகமான ஊழல் இழப்பு அல்லது நன்மை தொடர்பான வழக்குகளில் மட்டுமே, பணிப்பாளர் நாயகத்தின் சான்றிதழின் அடிப்படையில் விசேட சூழ்நிலைகளில் உயர் நீதிமன்றத்தால் பிணை வழங்க முடியும் எனவும் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஏற்பாடுகள் நீதவான் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை கடுமையாகக் குறைப்பதுடன், விசாரணை கட்டத்திலேயே பணிப்பாளர் நாயகத்திற்கு அதிக அதிகாரத்தை வழங்குவதாகவும், ஆரம்பத்திலிருந்தே ஒருவரின் சுதந்திரத்திற்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்குவதாகவும் சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிணை வழங்கப்படுவது வழமையாகவும், சிறையில் வைப்பது விதிவிலக்காகவும் இருக்க வேண்டும் என்ற சட்டக் கோட்பாடு மாற்றப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி என்ற அடிப்படைக் கொள்கையும், அரசியலமைப்பின் 13ஆவது உறுப்புரிமையின் கீழான தனிநபர் சுதந்திர உரிமையும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த திருத்தம் நடைமுறைக்கு வந்தால், பெருமளவிலானோர் நீண்ட காலமாக வழக்கு விசாரணைக்கு முன்பே தடுப்புக் காவலில் வைக்கப்படக்கூடும் என்றும், அவர்களில் பலர் பின்னர் விடுவிக்கப்படலாம் அல்லது பல ஆண்டுகள் வழக்குகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.(அ)

# மத்திய மாகாண புதிய ஆளுநராக ஹர்ஷா சுரங்க பெர்னாண்டோ!



கொழும்பு, ஓக. 07

மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சமூக மருத்துவ நிபுணர் டாக்டர் ஹர்ஷா சுரங்க பெர்னாண்டோ, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றார்.

டாக்டர் ஹர்ஷா சுரங்க பெர்னாண்டோ, உலக சுகாதார அமைப்பின் தடுப்பூசி நிபுணராக பல்வேறு நாடுகளில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். அதேவேளை, கண்டி மாவட்டத்தில் சமூக மருத்துவ நிபுணராகவும் சேவையாற்றியுள்ளார்.

புதிய ஆளுநரின் நியமனம் மத்திய மாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# தடை செய்யப்பட்ட பிரமிட் திட்ட நிறுவனங்கள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட பட்டியலை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் (திருத்தத்துடன்) 83(சி) பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஆள்களைச் சேர்க்கும் அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் நடைமுறையில் சாத்தியமற்ற அளவிலான அதிக இலாபத்தை உறுதியளிக்கும் முதலீட்டுத் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்வதைத் தவிர்க்குமாறும், இவ்வாறான மோசடி திட்டங்கள் குறித்து பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

மேலும், எதிர்கால நிதி இழப்புகளைத் தவிர்ப்பதற்காக எந்தவொரு முதலீட்டையும் மேற்கொள்வதற்கு முன்பு, அந்த முதலீட்டு வாய்ப்பின் நம்பகத்தன்மை மற்றும் சட்டபூர்வத்தன்மையை கட்டாயம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது. (அ)

# பரீட்சை நேரத்தில் மழை பாதிப்புகளை கண்காணித்து செயற்பட சிறப்புப் பிரிவு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 07

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியில் மழை அல்லது சீரற்ற வானிலையால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணித்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்புப் பிரிவொன்றை அமைக்கவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் மோசமான வானிலை நிலைமையை கருத்தில் கொண்டு, எதிர்வரும் புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை தடையின்றி நடத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில், சீரற்ற வானிலை ஏற்பட்டாலும் பரீட்சை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

இதற்கமைய, இன்று மற்றும் நாளை அதிக மழை பெய்தால், அதன் தாக்கங்களை கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாட்டு அறையில் சிறப்புப் பிரிவு இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு போன்ற அவசர நிலைமைகள் ஏற்பட்டால் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உதவுவதற்காக மீட்புப் படையினர் மற்றும் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 2,723 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை 2,532 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

(அ)

# தேசிய இரத்தினக்கல் ஆணையகத்தில் கடுமையான நிர்வாக முறைகேடுகள்!

## ஜனாதிபதிக்கு ஊழியர் சங்கங்கள் கடிதம்

கொழும்பு, ஓக. 07

குறைந்தபட்ச வசதிகள் கூட இல்லாத பொருத்தமற்ற கட்டடத்தில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆணையகம் இயங்குவதால் கடுமையான நிர்வாக, சுகாதார மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக ஊழியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு விரிவான கடிதமொன்றையும் அவை அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதத்தில், அரசுக்கு பெருமளவு வருவாய் ஈட்டிய இந்நிறுவனம் அதிகாரிகளின் தன்னிச்சையான முடிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026 ஜூலை 2ஆம் தேதி தொழிலாளர் துறை மேற்கொண்ட ஆய்வில், கட்டிடத்தின் வெப்பநிலை அனுமதிக்கப்பட்ட அளவை மீறியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாகவும், இதனால் ஊழியர்களுக்கு வெப்பப் பக்கவாதம், இதய மற்றும் சுவாச நோய்கள் உள்ளிட்ட கடுமையான உடல்நல அபாயங்கள் ஏற்படக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

17,000 சதுர அடி பரப்பளவில் 170 ஊழியர்களும் வெளி நிறுவனப் பிரதிநிதிகளும் பணியாற்றுவதால் இடப்பற்றாக்குறை, குறைந்த காற்றோட்டம், பாதுகாப்பற்ற திறந்த குழிகள், மூடப்பட்ட தீயணைப்பு வெளியேறும் வழிகள் மற்றும் போதிய சுகாதார வசதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசின் மதிப்பீடு அல்லது முறையான குத்தகை ஒப்பந்தம் இன்றி மாதம் ரூ.4.5 முதல் 5 மில்லியன் வரை வாடகை செலுத்தப்படுவதாகவும், தற்காலிக கையடக்க குளிரூட்டும் இயந்திரங்களுக்காக மாதந்தோறும் ரூ.3.8 மில்லியனுக்கும் அதிகமான பொதுப் பணம் வீணாகிறது என்றும் ஊழியர் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

(அ)

# சட்டவிரோத இணையவழி சூதாட்ட தளங்கள் முடக்கம்

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் உரிமம் பெறாமல் சட்டவிரோதமாக இணையவழி சூதாட்டம் மற்றும் பந்தய சேவைகளை வழங்கி வந்த 24 இணையத்தளங்களுக்கான அணுகலை உடனடியாகத் தடுக்க தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.


நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சூதாட்ட ஒழுங்குமுறை ஆணைக்குழு, 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சூதாட்ட ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறித்த சட்டத்தின் 44 ஆம் பிரிவின்படி, தேவையான செல்லுபடியாகும் உரிமங்களைப் பெறாமல் இலங்கையில் இணையவழி சூதாட்ட சேவைகளை நடத்துவதும், அவற்றை ஊக்குவிப்பதும் சட்டவிரோதமான குற்றமாகும்.

இதன்படி, சட்டவிரோத இணையதளங்களுக்கான அணுகலை இலங்கைக்குள் இருந்து தடுக்குமாறு அனைத்து தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை சட்டவிரோத இணையவழி சூதாட்ட நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார் இந்திய வெளிவிவகாரச் செயலாளர்



கொழும்பு, ஓக. 07

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் மற்றும் இலங்கை - இந்தியா இடையிலான நீண்டகால இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

அத்துடன், வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் இருநாட்டு மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் இரு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்முனை பொதுச் சந்தையில் அதிரடி சுகாதாரச் சோதனை!

## விதிமீறிய வியாபாரிகளுக்கு சட்ட நடவடிக்கை

அம்பாறை, ஒக. 07

கல்முனை பொதுச் சந்தைப் பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஷகிலா இஸ்ஸதீன் தலைமையிலான வழிகாட்டுதலிலும், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஸஹ்ரா சாரப்தீன் மேற்பார்வையிலும் இந்த அதிரடி சோதனை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச். ரிஸ்பின் தலைமையில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கல்முனை மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழுதடைந்த மரக்கறிகள், பழங்கள் மற்றும் பிற உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன், சுகாதார விதிமுறைகளை மீறிய வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மேலும், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக வியாபாரிகளுக்கு அதிகாரிகள் விழிப்புணர்வு ஆலோசனைகளையும் வழங்கினர். (அ)

# வேப்பையடி கலைமகள் ம.வியில் மாணவர் பாராளுமன்ற அமர்வு!

அம்பாறை, ஒக. 07

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற அமர்வு அதிபர் க. தியாகராஜா தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை பாராளுமன்ற அமர்வை முன்மாதிரியாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வில், மாணவர்களிடமிருந்து சபாநாயகர், பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், பல்வேறு விடயங்கள் தொடர்பாக குழு விவாதங்களும் வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

நிகழ்வில் சம்மாந்துறை கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். நைரோஸ்கான், ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் எம்.ஏ. அஸ்கர், ஆசிரியர் ஆலோசகர் எம்.எச். கபீர், பாடசாலையின் பிரதி அதிபர் எம். தர்மலிங்கம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய அதிதிகள், பின்தங்கிய பிரதேசத்தில் மாணவர்களின் ஜனநாயக அறிவையும் தலைமைத்துவத் திறனையும் மேம்படுத்தும் வகையில் இவ்வாறான நிகழ்வை ஏற்பாடு செய்த பாடசாலை நிர்வாகம் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தனர். (அ)



# கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சம்மாந்துறையில் முற்றுகை!

## பெண் உட்பட இருவர் கைது

அம்பாறை, ஒக. 07

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத்தீவு மற்றும் மல்வத்தை பகுதிகளில் சட்ட விரோதமாக இயங்கிவந்த இரு கசிப்பு உற்பத்தி நிலையங்களை சம்மாந்துறை பொலிஸார் நேற்று முன் தினம் சுற்றிவளைத்து முற்றுகையிட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் பெண் ஒருவர் உட்பட இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், மல்வத்தை - கணபதிபுரம் பாடசாலை முன் பகுதியில் கசிப்பு தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் மில்லிலீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதுடன், 57 வயதுடைய ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை, மல்லிகைத்தீவு பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு சுற்றிவளைப்பில் ஐந்து கேன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு இலட்சம் மில்லிலீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதுடன், 43 வயதுடைய பெண் ஒருவர் சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ளார்.


கல்முனைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனையின் பேரிலும், சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என். நிசாந்த பிரதீப் குமாரவின் வழிகாட்டலிலும் பொலிஸ் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களும் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# திருமலை மான் பூங்காவில் குவியும் சுற்றுலா பயணிகள்

திருகோணமலை, ஒக. 06

திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியை அண்மித்துள்ள மான் பூங்காவிற்கு அண்மைக்காலமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இயற்கைச் சூழலில் சுதந்திரமாக வாழும் மான்களை பார்வையிடவும், அவற்றுடன் நேரத்தை செலவிடவும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகை தருகின்றனர்.

மான்களைப் பாதுகாக்கும் நோக்கில் அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற அமைப்புகளும் பல்வேறு பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதன் விளைவாக, திருகோணமலையில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு மான் பூங்கா முக்கிய ஈர்ப்பாக மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது.



மான் பூங்காவைத் தவிர, திருகோணமலை கோணேஸ்வரர் கோயில் அமைந்துள்ள கோட்டைப் பகுதி மற்றும் பிரதான பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மான்கள் காணப்படுகின்றன. இதனால், சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேணுவதும், பொலித்தீன் உள்ளிட்ட மான்களுக்கு ஆபத்தான கழிவுகளை அப்பகுதிகளில் கொட்டுவதைத் தவிர்ப்பதும் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

மேலும், மான் இனங்களின் எண்ணிக்கையை ஆண்டுதோறும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் கணக்கெடுத்து, அவற்றின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)


# கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளராக வைத்தியர் அன்டன் அனஸ்டீன்

திருமலை, ஒக. 07

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் புதிய பிரதி மாகாண ஆணையாளராக சிரேஷ்ட வைத்தியர் அன்டன் அனஸ்டீன் நேற்று திருகோணமலையில் அமைந்துள்ள திணைக்கள அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகப் பணியாற்றி வந்த அவர், அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிராந்தியங்களைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர்கள் பங்கேற்ற அந்த நேர்முகத்



தேர்வில் அதிக புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ. நபில் தலைமையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# குருக்கள்மடம் மனிதப்புதைகுழி வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஒக. 07

குருக்கள்மடம் சந்தேகத்திற்கிடமான மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையை முடித்துவிட்டு கல்முனை வழியாக காத்தான்குடி நோக்கிப் பயணித்த முஸ்லிம்கள் ஆயுததாரிகளால் குருக்கள்மடத்தில் இடைமறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று முன் தினம் மேலதிக விசாரணைக்காக நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த தவணையில் சம்பவம் தொடர்பாக சோகோ அதிகாரிகள், பிரதான சட்ட வைத்திய அதிகாரி, மட்டக்களப்பு காணி பதிவாளர், பிரதேச செயலாளர், தொல்லியல் திணைக்களம் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் ஆகியவற்றுக்கு நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியிருந்தது.

எனினும், நேற்று முன் தினம் விசாரணையில் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தின் சார்பில் சட்டத்தரணி ஒருவர் மட்டும் ஆஜராகியிருந்த நிலையில், ஏனைய தரப்பினர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. இதையடுத்து, மேலதிக நடவடிக்கைகளுக்காக வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாகாண சபை...

சபைத் தேர்தல்களை "மிக விரைவில்" நடத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நடைமுறைப் படுத்துமாறு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இலங்கை அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது மற்றும் அவர்களின் படகுகள் தடுத்து வைக்கப்படுவது தொடர்பான பிரச்னைகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விரைவாக விடுவிக்க இலங்கையின் ஒத்துழைப்பை இந்தியா கோரியுள்ளதுடன், நீண்டகால மீன்பிடி பிரச்னைக்கு தீர்வு காணும் வரை மனிதாபிமான அணுகுமுறையை தொடர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

2024 டிசெம்பரில் வெளியிடப்பட்ட இந்தியா - இலங்கை கூட்டு அறிக்கையில், இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இலங்கைப் பிரதேசம் பயன்படுத்தப்படாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய உறுதிமொழியையும் விக்ரம் மிஸ்ரி வரவேற்றுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இலங்கைத் தமிழ், இந்திய வம்சாவளித் தமிழ் பிரதிநிதிகளையும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சந்தித்துள்ளார். (அ)

## நல்லூரான் வடக்கு...

தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12.00மணிக்கு காண்பிய விரிப்பு கண்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சட்டநாதர் சிவன் கோவிலிருந்து சமய அனுஷ்டானங்களுடன், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்தை ஏற்றிய இரட்டை திருக்கை காளை மாட்டு வண்டில் மங்கள வாத்தியங்கள் முழங்க வளைவை நோக்கிப் புறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12.00 மணிக்கு, நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்துடன் வரும் காளை மாட்டு வண்டில் முதன்முறையாக புதிய வளைவின் ஊடாக சென்ற அந்த மங்கள நிகழ்வின் மூலம் "நல்லூரான் வடக்கு வாசல் வளைவு" காண்பிய விரிப்பு கண்டது.

யாழ்ப்பாணத்தின் கந்தபுராண மரபையும் கலாசாரப் பாரம்பரியத்தையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வளைவு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## எத்தியோப்பியாவில்...

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 25, 26 மற்றும் 27 வயதுடைய மூன்று இளைஞர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியைச் சேர்ந்த தரகர் ஒருவரின் ஊடாக டுபாய் வழியாக எத்தியோப்பியா சென்று, பின்னர் அங்கிருந்து கனடா செல்லும் திட்டத்தில் அவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதற்காக விமானச் சீட்டு மற்றும் விசா ஏற்பாடுகளுக்காக ரூபா 64 இலட்சம் பெறப்பட்டதுடன், கனடா சென்றடைந்த பின்னர் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 100 இலட்சம் பெறுவதற்கான உடன்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எத்தியோப்பியா சென்றடைந்த பின்னர், குறித்த இளைஞர்கள் அங்குள்ள பாதாள உலகக் குழுவினரால் கடத்தப்பட்டதுடன், அவர்களை விடுவிப்பதற்காக ஒருவருக்கு 30,000 அமெரிக்க டொலர்கள் கப்பமாக கோரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, கடத்தப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த தரகரிடம் சுமார் 200 இலட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எத்தியோப்பிய பொலிஸார் மற்றும் இலங்கை தூதரக அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் கடத்தப்பட்ட மூன்று இளைஞர்களும் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் நான்கு பாகிஸ்தானியர்கள் மற்றும் எத்தியோப்பியர் ஒருவர் அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இளைஞர்களிடம் எத்தியோப்பியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அதன் பின்னர் அவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கடத்தல் மற்றும் கடற்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## சிந்துபாத்தி மயான...

அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

இந்த ஆரம்பகட்ட அகழ்வில் மனித எலும்புக்கூடுகள் அல்லது எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டால், அதன் பின்னர் நிலத்தை ஊடுருவிப் பரிசோதிக்கும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு, அப்பகுதியில் விரிவான அகழாய்வுகளை தொடர வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் விளக்கமளித்தார்.

மேலும், தற்போது அகழாய்வு நடைபெறும் சிந்துபாத்தி மயானத்தின் சுற்றுமதில்கள் அண்மைக் காலத்திலேயே அமைக்கப்பட்டவை என்றும், ஆரம்பத்தில் அந்தப் பகுதி திறந்த வெளியாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், அகழாய்வுகள் தற்போதைய சுற்றுமதில்களுக்குள் மட்டுமன்றி, அவற்றுக்கு வெளியேயும் முன்னெடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி, செய்மதி படங்களின் உதவியுடன் சந்தேகத்திற்கிடமான பகுதிகள் அடையாளம் காணப்பட்டால், அவற்றிலும் எழுமாற்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் கூறினார். (அ)

## தையிட்டி பவானி...

பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளரும் செயலாளரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகிலுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதியில் அமைக்கப்பட்ட தடையை முன்னிட்டு, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 59ஆவது பிரிவின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபை அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிவித்தல் சமாதான சீர்குலைவை ஏற்படுத்தக்கூடும் என்ற அடிப்படையில், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 81ஆவது பிரிவின் கீழ் பலாலி பொலிஸார் கடந்த மே 10ஆம் தேதி மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இதில் பிரதேச சபையின் தவிசாளரும் செயலாளரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது, பிரதிவாதிகள் இருவரும் சட்டத்தின் அடிப்படையில் தமது அதிகாரபூர்வ கடமைகளை நிறைவேற்றியவர்கள் என்பதும், ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் தீர்மானத்தை எதிர்ப்பதாயின் அது எழுத்தாணை மனு மூலம் வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்திலேயே சவாலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மேலும், ஒரு அரச திணைக்களமான பொலிஸார், மற்றொரு அரச அமைப்புக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 81ஆவது பிரிவின் கீழ் இவ்வகையான நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது என்ற சட்டவாதமும் முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து தீர்ப்பை ஒத்திவைத்திருந்த நீதிமன்றம், நேற்று வழங்கிய கட்டளையில், சமாதான சீர்குலைவு ஏற்படக்கூடிய நிலைமைக்கான போதுமான ஆதாரங்களை பலாலி பொலிஸார் முன்வைக்கத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டு, வழக்கை தள்ளுபடி செய்தது. அதனுடன், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளரும் செயலாளரும் வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டனர். (அ)

## கோப்பாபிலவு மக்களின்...

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 55 குடும் பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளை முதற்கட்டமாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி காணி உரிமையாளர்கள் அமைதியான முறையில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியேறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தி, காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாகும்.

போராட்டம் 45 நாட்களைக் கடந்துள்ள போதிலும் இதுவரை அதிகாரிகளிடமிருந்து எவ்வித நிரந்தரத் தீர்வும் கிடைக்கவில்லை என போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். தமது பூர்வீகக் காணிகள் மீட்கப்படும் வரை போராட்டத்தை எந்த நிலையிலும் கைவிடப் போவதில்லை என்றும் அவர்கள் உறுதியளித்தனர்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், கடும் வெப்பத்திலும் எதிர்காலத்தில் மழை பெய்தாலும் தமது போராட்டம் தொடரும் என்றும், ஆளுநர், அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் இதுவரை தங்களது நிலையை நேரில் பார்வையிடவோ, தீர்வு காண நடவடிக்கை எடுக்கவோ இல்லை என்றும் தெரிவித்தனர். (அ)

## 2.5 மில்லியன் டொலர்கள்...

இந்தப் பரிவர்த்தனை தொடர்பாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் முக்கிய தகவல்களை பகிர்ந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் மேலதிக விவரங்களை தற்போது வெளியிட முடியாது என்றும், கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இதற்கிடையில், பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நிதி மோசடி தொடர்பில் நிதியமைச்சை கடுமையாக விமர்சித்தனர். இந்தத் தவறுக்கு நிதியமைச்சின் அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும் என அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தெளிவுபடுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார். (அ)

## ஏக்கிய ராஜ்ய...

விக்ரம் மிஸ்ரிக்கும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் போது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்துள்ளார்.

குறித்த மகஜரில், கடந்த 77 ஆண்டுகளாக இனப்பிரச்னைக்கு முகங்கொடுத்து வரும் ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதில் இந்தியாவின் தலையீடு அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் தற்போது புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், அதில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பிரதிபலிக்கப்பட வேண்டும் எனவும், இதற்காக இந்திய அரசின் பங்களிப்பு தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1987ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மக்கள் என அங்கீகரிக்கப்பட்டதுடன், அந்தப் பகுதிகளுக்கான அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பான அடிப்படைக் கொள்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், அந்த ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கங்களை பலவீனப்படுத்தும் வகையில் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், தற்போதைய அரசியலமைப்பு முறைமை தமிழர்களின் சுயாட்சிக்கான அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2015-2019 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு வரைவை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்க முயற்சிப்பதாகத் தெரிவித்து, அதனைத் தடுத்து, தமிழ்த்தேசத்தை அங்கீகரிக்கும் மற்றும் அதன் தனித்துவமான இறையாண்மையை அடிப்படையாகக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளார். (அ)

## கொண்டாட்டத்துக்கு...

தயாராகிக் கொண்டிருந்துள்ளனர். அப்போது வீட்டில் இருந்த ஒருவர் குளியலறைக்குச் சென்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, திறந்திருந்த கதவு வழியாக திருடன் வீட்டுக்குள் நுழைந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

மறுநாள் காலை வீட்டார் எழுந்து பார்த்தபோது, அறையில் இருந்த அலுமாரிகள் திறந்த நிலையில் காணப்பட்டதுடன், திருமண நிகழ்வுக்காக தனியாக எடுத்து வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி உள்ளிட்ட அனைத்து தங்க நகைகளும் காணாமல் போயிருந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதையடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், மோப்ப நாய்களின் உதவியுடனும், சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள வீடுகளின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தும், பல்வேறு கோணங்களில் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## செம்மணியில் நேற்று...

எலும்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி-சித்துபாத்தி மனித புதைகுழி அகழாய்வின் மூன்றாம் கட்டத்தின் 45ஆவது நாளான நேற்று நடைபெற்ற பணிகளின் மூலம், இதுவரை மொத்தமாக 499 மனித எலும்புக்கூடுகள் மற்றும் எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 494 மனித எலும்புக்கூடுகள் மற்றும் எலும்புத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அகழாய்வு பணிகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர், தொல்பொருளியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ, சட்டத்தரணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணிகள் உள்ளிட்டோர் பணிகளை பார்வையிட்டு பங்கேற்றனர்.

செம்மணி மனித புதைகுழி அகழாய்வு, இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகளை வெளிக்கொணரும் முக்கிய நீதித்துறை நடவடிக்கையாகக் கருதப்படுவதால், அதன் முன்னேற்றம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தொடர்ந்து கவனத்தை ஈர்த்து வருகிறது.(அ)

## கடல் கொந்தளிப்பால்...

அதில் இருந்த 11 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் படகு ஒன்று கரையொதுங்கியுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற கடற்படையினர் படகில் இருந்த மீனவர்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மீனவர்களை கரைக்கு அழைத்து வந்த கடற்படையினர், குறித்த படகை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகப் பகுதிக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், மீட்கப்பட்ட 11 மீனவர்களையும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

## லிட்டோ எரிவாயு...

நடைமுறையில் உள்ள விலையிலேயே அனைத்து எரிவாயு கொள்கலன்களும் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 12.5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு கொள்கலன் 4,465 ரூபாய்க்கும், 5 கிலோகிராம் கொள்கலன் 1,792 ரூபாய்க்கும், 2.3 கிலோகிராம் கொள்கலன் 835 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்திர விலை மறுஆய்வின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஓகஸ்ட் மாதம் முழுவதும் இதே விலைகள் அமலில் இருக்கும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# 471 மருந்தகங்களில் சோதனை: 86 சட்ட மீறல்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக. 07

நுகர்வோரின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், இந்த ஆண்டில் நாடு முழுவதும் 471 விசேட மருந்தக சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 3 மற்றும் 4ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளில் 109 மருந்தகங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், அவற்றில் 86 சட்டமீறல்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2026 ஜனவரி 1ஆம் திகதி முதல் ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 362 மருந்தகங்களில் சோதனைகள் நடத்தப்பட்டிருந்த நிலையில், அண்மைய நடவடிக்கைகளுடன் சேர்த்து மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 471 ஆக உயர்ந்துள்ளது.

இந்த சட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் மூலம் நீதிமன்றங்களினால் மொத்தம் 22 இலட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சோதனைகளின் போது காலாவதியான மருந்துகள் விற்பனை செய்தல், கட்டாய நுகர்வோர் தகவல்கள் இல்லாத மருந்துகள், நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறுதல், மருத்துவ உபகரணங்கள், குழந்தைகள் பயன்பாட்டுப் பொருள்கள் மற்றும் ஏனைய நுகர்வோர் பொருள்கள் தொடர்பான பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இதன்போது கைப்பற்றப்பட்ட காலாவதியான மருந்துகள், மாத்திரைகள், ஊசி மருந்துகள், சிரிஞ்சுகள், கிரீம்கள், குழந்தைகள் பயன்பாட்டுப் பொருள்கள், கர்ப்பப் பரிசோதனை கருவிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக நீதவான் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# கோப் குழுவில் ஒழுங்கீனமாக நடந்த இரு அதிகாரிகள் மன்னிப்பு கோரினர்!

கொழும்பு, ஒக. 07

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கூட்டத்தின் போது ஒழுங்கீனமாக நடந்து கொண்ட கட்டுமானத் தொழில்துறை அபிவிருத்தி அதிகார சபையின் இரு அதிகாரிகள் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளதாகவும், அந்த மன்னிப்பை பாராளுமன்ற ஒழுக்கநெறி மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்தில், கட்டுமானத் தொழில்துறை அபிவிருத்தி அதிகார சபையின் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயல்திறன் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த இரு அதிகாரிகளின் நடத்தை தொடர்பில் கவலைகள் எழுந்ததாக கோப் குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவரான அதிகாரி பாராளுமன்றக் குழுவின் முன் ஆஜராகும் போது பின்பற்றவேண்டிய ஆடை ஒழுங்குமுறைகளை மீறியிருந்ததாகவும், இருவரும் கோப் குழுத் தலைவரின் அனுமதியின்றி கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து வெளியேறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, கோப் குழுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட சிறப்புரிமைப் பிரச்னையின் அடிப்படையில், பாராளுமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பாக குறித்த இரு அதிகாரிகளும் கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி ஒழுக்கநெறி மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளின் போது, தங்களது செயலின் தீவிரத்தை உணர்ந்துள்ளதாகத் தெரிவித்த இரு அதிகாரிகளும் மனப்பூர்வமான மன்னிப்பை கோரியுள்ளனர். பாராளுமன்றக் குழுக்களின் அதிகாரம், கண்ணியம் மற்றும் நடைமுறைகளை மதிப்பதன் அவசியத்தை அவர்கள் புரிந்துகொண்டுள்ளதை கருத்தில் கொண்டு, அந்த மன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசியல்வாதிகளின் சொத்து விவரம் மக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்!

## ஜனாதிபதி அநுரகுமார உத்தரவு

கொழும்பு, ஒக. 07

இலங்கையின் ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மீளாய்வு செய்து, அரசியல்வாதிகளின் சொத்து விவர அறிக்கைகள் தொடர்ந்து பொது மக்களின் பார்வைக்கு வெளியிடப்படுவதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழான சொத்து அறிவிப்பு நடைமுறையில் மாற்றங்களை முன்மொழிந்து, 2026 ஜூலை 24ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வரைவு திருத்தத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த திருத்த யோசனை, சட்டத்தின் கீழ் சுமார் 1 இலட்சத்து 60 ஆயிரம் சொத்து அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகவும், அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் பணியாற்றும் சில தனியார் துறை நிபுணர்கள் தங்களது சொத்து விவரங்களை கட்டாயமாக பகிரங்கப்படுத்துவது தனியுரிமையை பாதிக்கக்கூடும் எனக் கவலை வெளியிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவலைகளை கருத்தில் கொண்டு திருத்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார புதிய மாற்றங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, அரசியல்வாதிகள் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் சொத்து அறிவிப்புகள் தொடர்ந்து பொதுமக்களுக்கு அணுகக்கூடிய வகையில் இருக்கும் என்றும், ஏனைய பிரிவினரின் தனியுரிமை தொடர்பான விடயங்களுக்கு வேறுபட்ட நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது பிரதிநிதிகளின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மக்கள் கண்காணிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் திருத்தப்பட்ட யோசனை ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மீண்டும் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# சாவகச்சேரி உபதவிசாளர் பதவி நீக்க வழக்கு: தீர்ப்பு ஓகஸ்ட் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 07

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உபதவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோரை பதவியில் இருந்து நீக்கிய வட மாகாண ஆளுநரின் தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான வழக்கின் தீர்ப்பு, எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் அமர்ந்துள்ள வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் வழங்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தீர்ப்பை வழங்காமல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

வட மாகாண ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்ற உபதவிசாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஞானப்பிரகாசம் கிஷோர், அந்த நடவடிக்கை சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்டு, அதை இரத்து செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தொடர்பாக இரு தரப்பினரும் தங்களது வாதங்களை ஏற்கனவே முன்வைத்திருந்தனர்.

இதன்படி, ஞானப்பிரகாசம் கிஷோரின் பதவி நீக்கம் சட்டபூர்வமானதா என்பது தொடர்பான இறுதித் தீர்ப்பு ஓகஸ்ட் 19ஆம் திகதி வெளியாகவுள்ளது. இந்த வழக்கு, சாவகச்சேரி நகராட்சி மன்ற நிர்வாகத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார நடைமுறைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. (அ)

# நாட்டில் பாதுகாப்புப் படைகளின் திறனை மேம்படுத்துவது அவசியம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 07

பாதுகாப்புப் படைகள் விஞ்ஞான மற்றும் தொழில்முறைத் திறன்களில் உலகத் தரத்துடன் செயல்படும் வகையில் அவர்களைத் தயார்படுத்தி, தேவையான வசதிகளை வழங்குவது அவசியம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் 2026ஆம் ஆண்டுத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பாதுகாப்புப் படையினரின் கல்வி மற்றும் திறன் அபிவிருத்திக்கான நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், நிர்மாணத் துறை உள்ளிட்ட தேசிய அபிவிருத்திப் பணிகளில் அவர்களின் பங்களிப்பை விரிவுபடுத்தி அதற்கான விசேட கொடுப்பனவுகளையும் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படைகளின் பொறியியல் சேவைகளை தொழில்நுட்பம், நிர்மாணம் மற்றும் விசேட ஆலோசனைச் சேவைகளாக விரிவுபடுத்துவது, அரச நிர்மாணப் பணிகளில் ஏற்படும் தாமதம் மற்றும் செலவைக் குறைக்க முப்படையினரின் பொறியியல் திறன்களை அதிகளவில் பயன்படுத்துவது, இராணுவ மருத்துவப் பணியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வு காண்பது உள்ளிட்ட விடயங்களும் ஆராயப்பட்டன.

மேலும், அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கான நிதி ஒதுக்கீடுகள், டொப்ளர் ராடர் அமைப்புகள், மண்சரிவு அபாயக் குறைப்பு திட்டங்கள் மற்றும் டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள், உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. 2027ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்தத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 07

மாத்தறை முதல் பொத்துவில் வரையான, அம்பாந்தோட்டை ஊடாக நீளும் கடற்பகுதிகளில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று காலை 10.00 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கடற்பகுதிகளில் அவ்வப்போது கடல் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படக்கூடும் எனவும், மணித்தியாலத்திற்கு 60-70 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், கடற்படை மற்றும் கடற்றொழில் சமூகத்தினர் மறு அறிவித்தல் வரும் வரை குறித்த கடற்பகுதிகளுக்குள் பய்ணிப்பதைத் தவிர்க்குமாறும், எதிர்வரும் வானிலை அறிவிப்புகளை அவதானிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை, காங்கேசன்துறை, புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக மட்டக்களப்பு முதல் மாத்தறை வரையான ஏனைய கடற்பகுதிகளிலும் அவ்வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும், மணித்தியாலத்திற்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] நிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org